# 17

# சபையின் ஒருமைப்பாடு

*சுவிசேஷ ஊழியரான T.B. லேரி மோர் அவர்களின் கிறிஸ்துவைப் போன்ற ஆவியானது, அவரை அறிந்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. அவர் கிறிஸ்துவின் சபையினுடைய குடும்ப ஒருமைப்பாட்டை சங். 133:1 வசனத்துடன் விளக்கினார்: "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது!" சில விஷயங்கள் நல்லவைகளாயிருந்தும் இனிமையானவைகளா யிருப்பதில்லை. புற்றுநோயால் வளர்ந்த பகுதியை நீக்குவதற்குச் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை உயிர்காக்கக் கூடியதாகையால் நல்லதேயாகும், ஆனால் அது நோயாளிக்கு இனிமையானதாக இருப்பதில்லை. சில விஷயங்கள் இனிமையானவைகளாயிருந்தாலும் நல்லவைகளாக இருப்பதில்லை. விசேஷ நிகழ்ச்சிகளின் போது கேளிக்கைகள் இனிமையானதாகவும் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கக் கூடியதாகவும் இருக்கின்றன, ஆனால் தொடர்ந்து கேளிக்கைகளில் ஈடுபடுவதென்பது மிகவும் மோசமானதாகும். இந்த உலகத்தில் நாம் மிகச் சில விஷயங்களே நல்லவை மற்றும் இனிமையானவைகளாக இருப்பதாகக் காண்கின்றோம் என்று சகோதரர் லேரி மோர் அவர்கள் உற்றுக்கவனித்திருக்கின்றார். சில விஷயங்கள் மட்டுமே உண்மையி லேயே நமக்குப் பயனுள்ளவைகளாகவும், அதே வேளைகளில் மகிழ்ச்சியான அனுபவத்தைத் தருவதாகவும் அவர் கண்டறிந்துள்ளார். கிறிஸ்துவுடனான ஒருமைப்பாட்டில் சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணும்போது இந்தப் பண்புகள் காணப்படுவதாக அவர் காட்டினார்.[1] இவருடன் யார் ஒத்துப் போகாதிருக்க முடியும்?*

புதிய ஏற்பாட்டின்படி, கிறிஸ்துவில் ஒருமைப்பாட்டுடன் இருப்பதென்பது நமக்கு நல்லது மற்றும் இனிமையானது என்பது

*மட்டுமல்லாமல், மிக முக்கியமாக அது, தேவனுக்கு முன்பாக நல்லதாகவும், அவரைப் பிரியப்படுத்துவதாகவும் இருக்கின்றது. இந்த உலகத்தின் மகா இருளாகிய ஒரு நேரத்தில் பிரமாணமற்றவர்களிடம் காட்டிக் கொடுக்கப்படுவதற்குச் சற்று முன்னர், இயேசுவானவர் எதிர்காலத்தில் தம்மை விசுவாசிக்கப் போகின்றவர்களின் ஒருமைப் பாட்டிற்காக ஜெபித்தார். அவர் தமது பிதாவினிடத்தில், "நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னி லேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவா. 17:20, 21) என்று ஜெபித்தார்.*

*நாளைக்கு உங்களைத் தூக்கிலிடப் போவதாக நியமிக்கப் பட்டிருந்தால், இன்றிரவு நீங்கள் ஜெபம் பண்ண முழங்காலில் இருக்கும் வேளையில் எதற்கென்று நீங்கள் ஜெபிப்பீர்கள்? சிறிய, முக்கியமில்லாத திட்டங்களுக்காக நீங்கள் ஜெபிப்பீர்களா? இந்த உலகத்தில் உங்களுக்கு மிகவும் பிரியமான மற்றும் மிகவும் முக்கிய மான நம்பிக்கைகளுக்காக நீங்கள் ஜெபிக்க மாட்டீர்களா? இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய இரவில் செய்த ஜெபத்தை நாம் படிக்கையில், அவர் ஒருமைப்பாட்டை எவ்வளவாய் மதித்தார் என்று நாம் காண்பதில்லையா? விசுவாசிகளுக்குள் ஒருமைப்பாடு என்பது இயேசுவின் இருதயத்திற்கு மிகவும் பிரியமானதாகவும், மிகவும் முக்கியமானதாகவும் இருந்திருக்க வேண்டும், இல்லை யென்றால் அவர் தமது மரணத்திற்கு முந்திய இரவில் அதற்காக ஜெபம் செய்திருக்கமாட்டார்.*

*பரிதாபமான வகையில் பிரிந்திருந்த கொரிந்து பட்டணத்தின் சபைக்கு, பலவீனங்கள் மற்றும் பிரச்சனைகளினால் பாதிக்கப் பட்டிருந்த அந்த சபைக்குப் பவுல் நிருபத்தை எழுதும் போது, ஒருமைப்பாட்டிற்கான வல்லமை மிக்க அழைப்பை முதலாவது அவர் எழுதினார்: "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம் முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக் குப் புத்தி சொல்லுகிறேன்" (1 கொரி. 1:10). கி.பி. 54-56ல் பவுல்,*

கொரிந்தியர்களுக்கு இதை எழுதியபோது, நாமகரணக் கூட்டங்கள் இருந்திருக்கவில்லை. கர்த்தருடைய சபை மட்டுமே இருந்தது, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் பவுல், கொரிந்துவில் இருந்த தேவனுடைய சபையாருக்கு, ஒருமைப்பாட்டுடன் இருக்கும்படி கூறினார். அவர் ஒருமைப்பாட்டிற்காக வேண்டுகோள் விடுத்ததோடு, அதை இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

சபையின் ஒருமைப்பாட்டைப் பற்றி நாம் இன்னும் அதிகமான விபரங்களைப் பார்ப்போம். ஏற்கனவே மேற்கோள் காட்டப்பட்ட இரண்டு வசனப்பகுதிகளும், கிறிஸ்துவின் சபையானது ஒரு அழகான ஒருமைப்பாட்டை உடையதாய் இருக்க வேண்டும் என்பதை தெளிவு படுத்துகின்றன, ஆனால் எந்த வகையான ஒருமைப்பாட்டை அது பெற்றிருக்க வேண்டும்? அந்த ஒருமைப்பாட்டின் இயல்பு என்ன? கிறிஸ்து ஜெபித்த ஒருமைப்பாட்டைப் புரிந்து கொள்வதென்பது, சபையைப் பற்றி நாம் இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்வதற்கு உதவி செய்யவேண்டும்.

## சரீரத்தின் ஒரு பாகமாவதில் ஒருமைப்பாடு

முதலாவதாக, கிறிஸ்துவின் சரீரமானது ஒரே மக்களைக் கொண்டதாயிருப்பதற்காகத் தேவனால் கொடுக்கப்பட்ட ஒருமைப் பாட்டைப் புரிந்து கொள்வதற்கு நாம் முயற்சி செய்வோம். இயல்பானதும், கிறிஸ்துவுக்குள் இருப்பதில் அடிப்படையானதுமான ஒருமைப்பாட்டைப் பற்றிப் புதிய ஏற்பாடு பேசுகின்றது. ஒருவர் கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கும்போது தேவனுடைய கிருபையினால் அவருக்கு இந்த ஒருமைப்பாடு கிடைக்கின்றது. கிறிஸ்துவின் சரீரத்தில் உண்மையாகவே உறுப்பினராகும் எவரும் இந்த ஒருமைப்பாட்டைப் பெறுகின்றார்.

புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் இருந்த உலகமானது இரு பெரிய சமுதாயங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது: யூதர்கள் மற்றும் புறஜாதியார். இந்நாட்களில் இரு இனங்களுக்கிடையே இருக்கும் பிரிவு எவ்வளவு பெரியதாய் இருக்கின்றதோ, அதே அளவுக்கு, அந்த இரண்டு குழுக்களுக்கிடையேயும் பிரிவினை இருந்தது. ஆயினும், யூதர்களும் புறஜாதியாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகியிருந்ததைப் பவுல் உறுதிப்படுத்தினார்:

*அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி ... (எபே. 2:14).*

*...இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினால் இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபே. 2:15, 16).*

*யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை: நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்களே (கலா. 3:28).*

*கிறிஸ்து தமது சிலுவை மரணத்தினால், கிறிஸ்துவுக்குள் வருகின்ற எல்லா மக்களையும் அவர்களின் பின்னணி அல்லது இனம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு ஒன்றாக்குகின்றார். யூதர் மற்றும் புறஜாதியார் என்ற இரண்டு தனித்தனி இனங்களையும் ஒரு புதிய இனமாக மறுபடி சிருஷ்டித்து, அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். கிறிஸ்து யூதர்களைப் புறஜாதியாராகவோ அல்லது புறஜாதியாரை யூதர்களாகவோ ஆக்கவில்லை. அவர் புறஜாதிகளை யூதர்கள் பெற்றிருந்த சிலாக்கியத்திற்கு உயர்த்தவில்லை; அல்லது புறஜாதியாரின் கீழான நிலையினிடத்திற்கு யூதர்களை அவர் கொண்டு வரவில்லை. அவர் யூதர்களையும் புறஜாதிகளையும் அவ்விரு இனத்தாராலும் பெற்றிருக்கப்பட்ட சிலாக்கியங்கள் அல்லது நிலைமைகளுக்கும் மேலான பரலோகத்தின் நிலைமைக்குக் கொண்டு வந்து சேர்த்தார். யூதன், தான் யூதனென்பதையும், புறஜாதியான், தான் புறஜாதி என்பதையும் மறக்க வேண்டியதாயிருந்தது.*

*இன்றைய நாட்களிலும் சபையில் இதே விஷயம் உண்மையாக இருக்கின்றது. ஒவ்வொரு நபரும் தாம் கிறிஸ்துவுக்குள் எப்படியிருக்கின்றோம் என்பதையே நினைக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் எல்லாருக்கும் கிறிஸ்துவே கர்த்தரும் இரட்சகருமாயிருக்கின்றார். இந்தத் தெய்வீக ஒருமைப்பாட்டில், நாடு, இனம், சமூகம் மற்றும் குடும்பம் ஆகியவற்றைச் சார்ந்த எல்லா வேறுபாடுகளும் நீக்கப்படுகின்றன.*

*கிறிஸ்துவின் மூலமாக மக்கள் தேவனோடு ஒப்புரவாக்கப்-*

அல்லது மறுபடியும் ஒன்றாகக் கொண்டுவரப்-படுகின்றார்கள் (கொலோ. 1:20). பிறகு, இந்த ஒப்புரவாக்குதலின் மூலமாக, கிறிஸ் தவர்கள் ஒருவருக்கொருவர் ஒன்றுகூட்டப்பட்டு "ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறார்கள்" (எபே. 2:22). இரண்டு பேர் ஒருவருக்கொருவர் ஒருமைப்படுத்தப் படுவதற்கு முன்னால், அவர்கள் தேவனோடு ஒருமைப்படுத்தப்பட வேண்டும்.

வரலாற்றில் இப்படிப்பட்ட மக்களைப் பற்றிய எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. உதாரணமாக, நார்மன்கள் மற்றும் சாக்ஸன்கள் என்ற இரு இனத்தவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் வெறுப்பும் பொறாமையும் தொடர்ந்து இருந்து வந்தன. ஆனால் சில நூற்றாண்டுகள் கடந்தபோது, அவைகளினூடே, இந்த மக்கள் ஒன்று கலந்து, திருமணங்கள் செய்து கொண்டு இரு இனங்களும் ஒன்றாகவே ஆகுமளவுக்கு இரண்டறக் கலந்துவிட்டார்கள். இவ்விதமாக, தனித்தனி நாடு, தனித்தனி சமூகங்கள் என்பது இல்லாமல் போய் விட்டது. அவர்களுக்குள் பிரிவினை இல்லாது போய் விட்டதால் யுத்தங்களும் முடிவுக்கு வந்தன. இந்த இரண்டு சமூகங்களும் ஒன்று கலந்ததன் விளைவாக ஒருவரையொருவர் நேசித்து, மதிக்கின்ற ஒரு புதிய சமூகம் உண்டாயிற்று.[2]

இதே போன்ற ஒரு வழியிலேயே மனிதரின் எல்லாப் பிரிவுகளும், தடைகளும் கிறிஸ்துவுக்குள்ளாக முறிக்கப்பட்டன; தேவனுடைய ஆச்சரியமான கிருபையினாலே மக்களுக்கான ஒரே சரீரம் உருவாக்கப் பட்டுள்ளது. அவருடைய சரீரத்தில் மக்கள் யூதர் அல்லது கிரேக்க ரென்றோ, அடிமை அல்லது சுயாதீனரென்றோ, பணக்காரர் அல்லது ஏழை மனிதரென்றோ, ஆண் அல்லது பெண் என்றோ, வெள்ளையர் அல்லது கறுப்பர் என்றோ பார்ப்பதில்லை. "எல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்" (கலா. 3:28ஆ) என்று மட்டுமே கிறிஸ்தவர்கள் பார்க்கின்றார்கள்.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஒருமைப்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு, முதலாவதாக நாம் அவரது சரீரத்தில் பிரவேசிக்கும் போது கிறிஸ்தவர்களுக்கு தரப்படும் ஒருமைப்பாட்டைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கும் புதிய கிறிஸ்தவர்களுக்கு, அவர்கள் இப்பொழுது அவரது சரீரத்தில் இருக்கும் மற்ற உறுப்பினர்களுடன் ஒன்றாகின்றார்கள் என்று கூறுவது

தகுதியானதும் அவசியமானதும்கூட ஆகும். சபையானது இந்த சத்தியத்தைச் சிந்தித்துப் பார்த்து, இதற்கு ஒப்பச்செயல்பட வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தில் தகுதிகள், தடைகள், பிரிவுகள் மற்றும் இனங்கள் போன்ற எவையும் பொருட்படுத்தப்படவில்லை. எல்லா உறுப்பினர்களும், கிறிஸ்துவோடும், ஒவ்வொருவரும் மற்றவரோடும் ஒன்றாகின்றார்கள்.

## போதனையில் ஒருமைப்பாடு

இரண்டாவதாக, கிறிஸ்துவுக்குள் போதனையில் ஒருமைப்பாடு காணப்படுகின்றது. மக்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கும் போது, அவர்களுக்கு ஆவியானவரால் ஒருமைப்பாடு தரப்படுகின்றது, ஆனால் இந்த ஒருமைப்பாடானது ஒவ்வொரு உறுப்பினரும் வேத வசனங்களுக்குக் கீழ்ப்படிவதினாலேயே பராமரிக்கப்படுகின்றது.

போதனை மற்றும் விசுவாசம் என்ற ஐக்கியம் ஒன்றினால் கிறிஸ்தவர்கள் ஒன்றாகக் கட்டப்பட்டிருக்கின்றார்கள். கிறிஸ்துவின் சரீரம் என்பது, தேவனைப் பற்றிய நிரூபிக்கப்பட்டிராத நம்பிக்கைகளும், வாழ்க்கையைப் பற்றிய சுயமான யூகங்களும் கொண்ட மக்களின் கூட்டமல்ல. அவருடைய சரீரத்தின் உறுப்பினர்கள் சத்தியத்தைப் பற்றிய தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டினால் ஒருமைப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

கிறிஸ்துவின் சபையில் ஒருமைப்பாட்டைப் பற்றிப் பவுல் விவாதிக்கையில், அவர் கிறிஸ்தவர்களைச் சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதில் ஜாக்கிரதையாயிருக்கும்படி வற்புறுத்துகின்றார். கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க அடிப்படையான உபதேசத்தை அமைக்கின்ற ஏழு “ஒன்று” களை அவர் குறிப்பிட்டார். அவர், “உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்” (எபே. 4:4-6) என்று கூறினார். இதில் பவுல் குறிப்பிடும் சரீரம், கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையே ஆகும் (எபே. 1:22, 23). ஆவி என்பது வேதவசனங்களின் வெளிப்பாடுகளை நமக்குக் கொடுத்தவரும், தேவத்துவத்தின் மூன்றாம்

நபருமாகிய பரிசுத்த ஆவியானவரே ஆவார். ஒரே நம்பிக்கை என்பது, சுவிசேஷத்தின் மூலமாக ஒவ்வொரு கிறிஸ்தவரின் இருதயத்திலும் வைக்கப்பட்ட நித்தியமான நம்பிக்கையே ஆகும் (கொலோ. 1:22). ஒரே கர்த்தர் என்பவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனும், நமது பாவங்களுக்காக மரித்து, நம்மை நீதிமான்களாக்குவதற்காக உயிர்த்தவருமாயிருக்கின்ற கிறிஸ்துவே ஆவார். ஒரே விசுவாசம் என்பது கிறிஸ்துவிலும், வேதவசனங்களின் சாட்சியத்திலிருந்து வரும் அவரது வார்த்தையிலும் கொள்ளுகின்ற விசுவாசமேயாகும் (ரோமர் 10:17). ஒரே ஞானஸ்நானம் என்பது பிரதான கட்டளையில் கிறிஸ்து கட்டளையிட்டதும், கிறிஸ்துவின் யுகம் முடியுமட்டும் அமுலில் இருக்க வேண்டியதுமான ஞானஸ்நானமேயாகும் (மத். 28:19, 20). ஒரே தேவன் என்பவர், பூமியை உண்டாக்கி, அதற்குத் தேவையான வற்றைக் கொடுக்கின்றவரும், உண்மையான உயிருள்ள ஒரே தேவனு மாகிய நித்திய தேவனேயாவார். இந்த ஏழு "ஒன்று" களைப் பற்றி R.C. பெல் அவர்கள், "மாற்ற முடியாத, இறுதியான இந்த உண்மைகளை ஒன்று ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது உதறித் தள்ள வேண்டும். வேறு எவ்விதமான பதில்செயலும் செய்ய முடியாது; இவைகளில் ஒன்றையாவது மறுக்கின்ற எவரும் தம்மைக் கிறிஸ்தவர் என்று கூறிக் கொள்ளத் தகுதியற்றவராகின்றார்" என்று கூறினார்.[3]

கூட்டுறவு (Union) என்பது வேறு, ஒருமைப்பாடு (Unity) என்பது வேறு. கூட்டுறவு என்பதை வலிமையினால் ஏற்படுத்த முடியும், ஆனால் ஒருமைப்பாடு என்பது தேவபக்தியினால் மட்டுமே நிலைநாட்டப்பட முடியும். இரண்டு மனிதர்களைக் கயிற்றினால் கட்டி வைத்துக் கூட்டுறவை உண்டாக்க முடியும், ஆனால் விசுவாசம் மற்றும் அன்பினால் இரண்டு இருதயங்களும் ஒன்று சேர்ந்துக் கட்டப்படும்போது மட்டுமே ஒருமைப்பாடு ஏற்பட முடியும். பிளவுபட்ட சிந்தையும், விருப்பங்களும் உள்ள மனிதர்கள் ஒருவகையான கூட்டுறவை அனுபவிக்க முடியும், ஆனால் ஒரே விதமான சத்தியங்களைப் பேசுவதன் மூலமும், ஒரே சிந்தனையும் ஒரே முடிவும் கொண்டவர்களாய் இருப்பதன் மூலமும், ஒன்றாக வாசம்பண்ணும் மக்கள் மட்டுமே ஒருமைப்பாட்டை அனுபவிக்க முடியும்.

1 கொரி. 1:10ல் பவுல் ஒருமைப்பாட்டிற்கான வேண்டுகோளை விடுத்ததோடு, தான் வேண்டிக் கேட்டுக்கொண்ட ஒருமைப்பாடு எத்தன்மையுடையது என்பதையும் மிகச் சரியாகக் கூறினார்-

பிரிவினைகளில்லாமல் ஏக யோசனையும் ஏக சிந்தனையும் உள்ள, ஒத்துப் போகும் ஒருமைப்பாட்டையே அவர் வலியுறுத்தினார். கிறிஸ்துவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்பதால் மட்டுமே இத்தகைய ஒருமைப்பாட்டைக் கொண்டு வர முடியும். அப். 2ல் சபையானது நிலைநாட்டப்பட்ட நாளில், ஏவப்பட்ட மனிதர்களால் கூறப்பட்ட ஆவியானவரின் செய்திக்கு ஒவ்வொருவரும் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். இந்த ஒப்புக் கொடுத்தலானது தேவனுடைய செய்தியில் பகிர்ந்து கொள்ளப்பட்ட விசுவாசத்தின் அடிப்படையில் ஒருமைப் பாட்டை விளைவித்தது: "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் ... உறுதியாய்த் தரித்திருந்தார்கள் ... விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்" (அப். 2:42-44). பிலிப்பியில் இருந்த சகோதரர்களுக்குப் பவுல், "... நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக" (பிலி. 3:16) என்று எழுதினார்.

## அன்றாட வாழ்க்கையில் ஒருமைப்பாடு

மூன்றாவதாக, கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருமைப்பாடானது, அன்றாட வாழ்க்கையில் காணப்பட வேண்டியதாயிருக்கின்றது. மக்கள் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கும் பொழுது ஆவியானவரால் தரப்பட்ட ஒருமைப்பாடானது ஒவ்வொரு உறுப்பினரும் வேத வசனத்தின் எளிய போதனைக்குக் கீழ்ப்படிவதால் மட்டுமல்லாது, கிறிஸ்துவுக்குள் ஒரே சிந்தையாயிருந்து நடைமுறை வாழ்வினைப் பின்பற்றி, ஒன்றாக இருப்பதில் தங்களின் பொது அறிவைப் பயன்படுத்தும் அணுகுமுறையாலும் பாதுகாக்கப்பட வேண்டியதாய் இருக்கின்றது.

அன்பு மற்றும் இணக்கம் ஆகியவற்றுடன் ஒருமித்து வாழும்படி பிலிப்பியில் இருந்த சகோதரர்களைப் பவுல் உற்சாகப்படுத்தினார். அவர், "நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்" (பிலி. 2:2) என்று கூறினார். மேலும் அவர், "கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகின்றேன்" (பிலி. 4:2) என்றும் கூறினார். கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் வேதாக

*மத்தின் போதனைகளின்படி வாழ வேண்டும் என்பதை இந்த வசனங் கள் அவசியமானதாக வற்புறுத்துகின்றன. ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காகக் கிறிஸ்தவர்கள் சில நேரங்களில் தங்கள் கருத்துக்கள் மற்றும் விருப்பங்களை தங்களுக்குள்ளாகவே வைத்துக் கொள்ள வேண்டியதாயிருக்கின்றது.*

*எந்த ஒரு சகோதரரும்/சகோதரியும் தங்களது மனச்சாட்சிக்கு விரோதமான செயலைச் செய்யும்படி சபை எப்பொழுதுமே வற்புறுத்துவதில்லை. பவுல் பின்வருமாறு கூறினார்:*

> *இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலை யும் போடலாகாதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள் (ரோமர் 14:13).*

> *அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக் கடவன். கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல்: உம்மை நிந்திக்கிறவர் களுடைய நிந்தைகள் என் மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிற படியே நடந்தார் (ரோமர் 15:1-3).*

*நடைமுறை ஒருமைப்பாட்டில் கொடுக்கல் வாங்கல் அவசிய மாயிருக்கின்றது. சுயநலமுள்ள மனிதன் மற்றவர்களுடன் ஒருமைப் பாட்டில் இருப்பதை என்றுமே அறியமாட்டான். அவன் எப்பொழு துமே தனது சுயநலத் தேவைகளால் நான்கு புறமும் சூழப்பட்டுள்ள ஒரு சிறிய இராஜ்யத்திற்குள் வாழ்பவனாயிருப்பான். மற்றவர் களுடன் உண்மையான ஐக்கியத்தைக் கொண்டிருப்பதற்காக அவன் அந்த இராஜ்யத்தை விட்டு வெளிவரவும் முடியாது, உண்மையான ஐக்கியம் கொள்ளும்படி மற்ற எவரும் அதற்குள் பிரவேசிக்கவும் முடியாது.*

*இந்த நடைமுறை ஒருமைப்பாட்டை கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தனது சகோதரர் அல்லது சகோதரியைப் பற்றி அன்புடனும் கிருபையுடனும் எண்ணிப் பார்க்க*

ஜாக்கிரதையுடன் முயற்சி செய்வதன் மூலம் வளர்க்கின்றார். கிறிஸ்தவர் தமது சொந்தக் கருத்து மற்றும் விருப்பங்களை மிகக் குறைவாகவே வற்புறுத்த வேண்டியதாயிருக்கின்றது. அவர் தமது சுயநலம் அல்லது வெறுமையான இறுமாப்பினால் எதையும் செய்யாமல், தாழ்மையான சிந்தையுடன், தம்மைக் காட்டிலும் மற்றவர்களை மிகவும் முக்கியமானவராகக் கருத வேண்டும் (பிலி. 2:3). அவர் தமது சொந்த விருப்பங்களைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது; மற்றவர்களுடைய விருப்பங்களை அவர் கண்ணோக்க வேண்டும் (பிலி. 2:4). இப்படி வாழும்போது அவர் கிறிஸ்துவின் சிந்தையைத் தனிச் சிறப்பான முறையில் வெளிக்காண்பிக்கிறவராய் இருக்கின்றார் (பிலி. 2:5-8).

## முடிவுரை

ஆகவே, கிறிஸ்துவின் சரீரமானது அதன் ஒருமைப்பாட்டினால் அறியப்பட வேண்டியதாய் இருக்கின்றது. இந்த ஒருமைப்பாடானது மூன்று வகையான இயல்புடையதாக இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் ஒரே சரீரம் என்ற வகையில் ஒருமைப்பாடு கொண்டிருக்கின்றார்கள். ஒரே உபதேசத்தை விசுவாசிப்பவர்கள் என்ற வகையில் அவர்கள் ஒருமைப்பாடு கொண்டிருக்கின்றார்கள் மற்றும் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் ஒருவரைப்பற்றி யொருவர் சிந்திப்பதன் மூலமும் ஒருமைப்பாடு கொண்டிருக்கின்றார்கள். புதுக் கிறிஸ்தவர்கள் அவரது சரீரத்தில் பிரவேசிக்கையில் தேவனுடைய கிருபையினால் ஒருமைப் பாடு வருகின்றது. அந்த சரீரம் வேதவசனங்களின் போதனைக்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுப்பதின் மூலம் இந்த ஒருமைப் பாடு பாதுகாக்கப்பட்டு, அனுபவிக்கப்படுகின்றது. சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் தமது சக கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் அக்கறை கொள்வதால், இந்த ஒருமைப்பாடு மகிழ்ச்சி யுடன் அநுபவிக்கப்படுகின்றது.

தேவன் தமது உலகத்தில் இருக்கும் கலகலக்கும் கருத்து வேறு பாடுகள் எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் இணக்கமுள்ளதாக்கும் படிக்குத் தேடி விரும்புகின்றார்: "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத் திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்

*கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ. 1:19, 20).* கிறிஸ்து தமது சுவிசேஷத்தின் மூலமாக அவரது சரீரத்தில் இந்த ஒருமைப்பாட்டிற்கு நம்மை அழைக்கின்றார். தேவன் இதற்குத் திட்டமிட்டார் (எபே. 3:6), கிறிஸ்து இதற்காக ஜெபித்து, இதற்கேற்ற சாத்தியக் கூறுகளை அளித்திருக்கின்றார் (யோவா. 17:21; எபே. 2:16), பவுல் இதற்காக வேண்டுகோள் விடுத்தார் (1 கொரி. 1:10), மற்றும் ஆவியானவர் இதை உண்டாக்குகின்றார் (எபே. 4:1-6).

இந்த ஒருமைப்பாட்டைப் பெற்று அதன்படி வாழ்வதன் மூலம் இதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா?

## பாட வினாக்கள்

*(விடைகள் 319 ம் பக்கங்களில்)*

1. கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாட்டுடன் இருப்பது எந்த வழியில் இன்பமும் நன்மையுமாயிருக்கின்றது?
2. கிறிஸ்து சிலுவையிலறையப்படுவதற்கு முந்திய இரவில் அவரது சபைக்காக அவருடைய விசேஷித்த ஜெபம் என்ன? (யோவா. 17:21-24ஐக் காணவும்).
3. 1 கொரி. 1:10ல் ஒருமைப்பாட்டிற்கான பவுலின் வேண்டு கோளை விவாதித்து அறியவும்.
4. கிறிஸ்துவின் சபையானது ஒரு சரீரம் என்ற வகையில் பெற்றுள்ள ஒருமைப்பாட்டைப் பற்றி விளக்குக.
5. சபைக்குள் பிரவேசிப்பவருக்கு சபையின் ஒருமைப்பாடு எப்பொழுது கொடுக்கப்படுகின்றது?
6. போதனையில் சபையின் ஒருமைப்பாட்டைப் பற்றி விவரிக்கவும். ஒரு சரீரம் என்ற வகையில் ஒருமைப்பாட்டைப் பெற்றிருப்பதற்கும், போதனையில் ஒருமைப்பாட்டைப் பெற்றிருப்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன?
7. ஒருமைப்பாடும், கிறிஸ்துவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத் தலும் எவ்விதத்தில் தொடர்ப்புபடுத்தப்படுகின்றன?
8. போதனையில் ஒருமைப்பாட்டைப் பெற்றிருப்பதற்கும், அன்றாட வாழ்க்கையில் ஒருமைப்பாட்டைப் பெற்றிருப்பதற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?
9. சபையின் நடைமுறை ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க சில வேளைகளில் கிறிஸ்தவர்கள் மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகள் யாவை?

## வார்த்தை உதவிகள்

***மனச்சாட்சி*** - *மனிதர்களுக்குள் காணப்படும் ஒழுக்கம் பற்றிய உள்ளரங்கமான சாட்சி; சில வேளைகளில் இது நமக்கு நல்லது மற்றும் கெட்டது எது என்பதை உள்ளான குரலாகக் கூறுவதாக எண்ணப் படுகின்றது. மனச்சாட்சியானது தேவனுடைய வசனத்தினால் போதிக்கப்பட வேண்டியதாய் இருக்கின்றது.*

***எயோதியாள் மற்றும் சிந்திகேயாள்*** - *தங்களுக்குள் வழக்காடிக் கொண்டிருந்த இரண்டு கிறிஸ்தவப் பெண்மணிகள் (பிலி. 4:2). அவர்கள் ஒருவருக்கொருவர் சமாதானமாயிருக்கும்படியாகப் பவுல் வேண்டுகோள் விடுத்தார்.*

---

[1]T.B. Larimore, "Unity," in *Biographies and Sermons,* ed., F.D. Srygley (n.p., n.d.; reprint, Nashville: Gospel Advocate, 1961), 35-36. [2]R.C. Bell, *Studies in Ephesians* (Austin, Tex: Firm Foundation Publishing House, 1971), 25. [3]Ibid., 24.